சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த்
தலைமுறை தலைமுறைக்கும்
சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.
எபேசியர் 3:21



# ஆதி திருச்சபை

(அப்போஸ்தலர்களின் கால சபை - முதலாம் நூற்றாண்டு)

CLASS – V
ĔŇù PART – 1/4

## பொருளடக்கம்

அத்தியாயம் பக்கம்


1. சபை சரித்திரத்தின் பிரிவுகள்
2. ஆதி திருச்சபை
   - திருச்சபை என்றால் என்ன?
3. முதல் திருச்சபை அஸ்த்திவாரம் இடல்
4. யூத பின்ன்னணியில் கிறிஸ்த்தவம்
   - யூத மதப்பிரிவுகள்
5. திருச்ச்சபையின் பண்புகள்
6. யூத கலவரம்
   - யூத கலவரத்திற்க்கான காரணிகள்
7. முதல் இரத்தசாட்சி
   - ஸ்தேவானுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றங்கள்
8. பிற இடங்களுக்கு நற்செய்தி
9. பிற இனத்தவறுக்கு நற்செய்தி
10. பவுல் (சவுல்) கண்ட இயேசுவின் காட்சி
11. எருசலேம் பொதுச்சங்கம் கூட்டப்பட்டதின் பின்னணி
12. எருசலேம் பொதுச்சங்கம்
13. எருசலேம் பொதுச்ச்சங்க்கத்த்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்
   - கடிதத்தில் எழுதி அனுப்பப்பட்ட முடிவுகள்
14. திருச்ச்சபையின் வளர்ச்ச்சி
15. இரத்தசாட்சிகள்
16. நீரோவின் கொடுங்கோள் ஆச்சி
   - நாசரீயர்கள் (Nazareans)
17. கிளெமண்டின் நிருபம்
18. முதல் நூற்றாண்டு சம்பவங்கள் சுருக்கமாக

நாமெல்லாரும் பள்ளியில் வரலாற்றை ஒரு பாடமாக கற்றிருக்கிறோம். ஆனால், எல்லோருக்குமே வரலாற்றுப் பாடத்தில் ஆர்வம் இருக்காது. நம் நாட்டு வரலாறும் கூட அதிகம் தெரியாமல் இருப்பவர்கள் அநேகர். அன்றாட வாழ்க்கைக்கும் செய்யும் தொழிலுக்கும் அது அவசியமில்லாமல் இருப்பதால் தான் அதில் நாம் கவனம் செலுத்துவதில்லை. இதனால் நமக்கு பொது அறிவும் குறைவாக இருக்கிறது.

நம் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டது தான் நம் வரலாறும், நம்மைச் சார்ந்தவர்களின் வரலாறும். வரலாறு தெரியாமல் வேதாகமத்தை நாம் எப்படி விளங்கிக்கொள்ள முடியும்? ஒரு வேதப்பகுதியை சரியாக விளங்கிக் கொள்ள அந்தப் பகுதி பற்றிய வரலாறு அவசியமாயிருக்கிறது.

நாம் கிறிஸ்துவின் திருசபையின் அங்கத்தவர்களாக இருக்கிறோம். அந்தத் திருச்சபை இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவால் கட்டப்பட்டுக் கொண்டு வருகிறது. திருச்சபை வரலாறு தெரியாவிட்டால் நாம் அங்கம் வகிக்கும் உலகளாவிய சபையைப் பற்றி நமக்குத் தெரியாது என்றுதானே அர்த்தமாகிவிடும்.

சத்தியத்தில் நாம் தெளிவு அடைய வேண்டுமானால் திருச்சபை வரலாற்றை அரிந்து கொள்ளவேண்டியது அவசியம். அப்படிப் அரிந்து கொள்ளும்போழுது தவறான போதனைகள் என்னென்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

## 1. சபை சரித்திரத்தின் பிரிவுகள்

திருச்சபை காலங்களில் சம்பவித்த விஷயங்கள், சபை உபதேசங்கள் திருத்திய வரலாறுகள், இவைகளை குறித்த ஆராய்ச்சிகள் ஆகியவற்றை அடிபடையாக கொண்டு ஆய்வாளர்கள் திருச்சபை சரித்திரத்தை ஆறுபிரிவுகளாக பிரித்துள்ளார்கள். அவை,

1. ***கி.பி. 30-100 அப்போஸ்தலர்களின் கால திருச்சபை / ஆதி திருச்சபை***
   இயேசுகிறிஸ்து உயிர்தெழுந்து பரலோகத்திற்கு பரமேறி சென்ற காலத்திலிருந்து, இயேசுவின் சீஷனாகிய அப்போஸ்தலனாகிய யோவானின் மரணம் வரை உள்ள காலம்.
2. ***கி.பி. 100-313 உபத்திரவ கால திருச்சபை***
   அப்போஸ்தலன் யோவான் மரித்த காலம் தொடங்கி, கான்ஸ்டன்டைன் இராஜா கிறிஸ்தவ சபையின் பொறுப்பெடுத்த காலம்வரை உண்டான கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட பயங்கர உபத்திரவ காலகட்டங்கள்.
3. ***கி.பி. 314-476 இராஜாக்களின் தலைமையில் திருச்சபை***
   இராஜாக்களின் தலைமையில் இயங்கப்பட்ட சபைகளின் காலம் தொடங்கி சபைகளின்மேல் ரோமாபுரியின் ஆதிக்கம் வீழ்ச்சியடைந்தகாலம் வரை உள்ள வரலாறு.
4. ***கி.பி. 476-1453 இடைப்பட்ட கால திருச்சபை***
   ரோமாபுரியின் ஆதிக்கத்தின் வீழ்ச்சி காலம் தொடங்கி, கான்ஸ்டன்டைன் டிநோபுளும் வீழ்ச்சியுற்ற வரை உள்ள வரலாறு.

5. **கி.பி. 1453-1648 திருச்சபை மறுமலர்ச்சி**

   *கான்டன்டைன் டிநோபாளின் அரசாட்சி வீழ்ச்சியடைந்த காலத்திலிருந்து, அதை தொடர்ந்து நடந்த பயங்கரபோர்முடிய சுமார் 30 வருடங்களானது. அந்த காலங்களில் நடந்த வரலாறு.*

6. **கி.பி. 1648-1900 நவீன கால திருச்சபை**

   *நடந்துமுடிந்த 30 ஆண்டுகால யுத்தத்திற்கு 19ம் நூற்றாண்டு காலம்வரை உள்ள வரலாறு.*

## 2. ஆதி திருச்சபை (திருச்சபையின் ஆரம்ப காலம்)



ஆதி திருச்சபை அல்லது அப்போஸ்தலர்களின் கால சபை (APOSTOLIC CHURCH) என்பது கி.பி. 30 முதல் 100 வரை உள்ள காலம் ஆகும். அதாவது இயேசுகிறிஸ்துவின் உயிர்தெழுதலுக்கு பிறகு இயேசுகிறிஸ்து பரலோகத்திற்கு பரமேறி சென்ற காலத்திலிருந்து, இயேசுவின் சீஷனாகிய அப்போஸ்தலனாகிய யோவானின் மரணம்வரை உள்ள காலம்.

கிறிஸ்துவிற்க்கு முன்னும் சபைகள் இருந்தது. அப்போஸ்தலர் 13:8 வனாந்தரத்தில் ஒரு சபை இருந்ததாகப் போதிக்கிறது. திருச்சபை புதிய ஏற்பாட்டில் காணப்படும் விதத்தில் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் திருச்சபை புதிய உடன்படிக்கையின் சபையாக ஒரு அமைப்பாக, யூத மதத்தில் இருந்தும், புறஜாதியார் மத்தியில் இருந்தும் வரும் மக்களைக் கொண்டு விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்த சபையாகக் காட்சி அளிக்கிறது. இதனால்தான், இயேசுவும் மத்தேயு 16:18ல் "நான் என் சபையைக் கட்டுவேன்" ("I will build My Church" – future tense) என்று எதிர்காலத்தில் பேசியுள்ளார். பழைய ஏற்பாட்டில் சபை நிச்சயமாக இருந்தபோதும், புதிய ஏற்பாட்டில் அது முன்பிருந்திராத வகையில் ஒரு கட்டுக்கோப்பான அமைப்பாக மரித்து உயிர்தெழுந்த இயேசு கிறிஸ்துவைத் தலைக்கல்லாகக் கொண்டு எழுந்தது.

- *"வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே (இயேசுவே) மூலைக்குத் தலைக்கல்லானவர்." - அப்போஸ்தலர் 4:11*

இக்காலப்பகுதியில் ரோமர்களின் ஆட்சியில் உலகின் பெரும்பகுதி இருந்தது. அவர்களுடைய ஆட்சியில் கிரேக்க மொழி எல்லா இடங்களிலும் பரவி மக்களால் பேசப்பட்டு வந்ததும்.

**திருச்சபை என்றால் என்ன?**

நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவை இறை மகனாகவும், அனைத்துலக இரச்சகர்ராகவும், அவருடைய போதனைகளையும் ஏற்று அவர்மேல் விசுவாசம் கொண்டு, அவருடைய பெயரால் ஞானஸ்நானம் பெற்று, அவர் ஏற்படுத்திய அதிகாரத்தின் வழிநடத்துதலின் கீழ் வாழ்வோரின் (கிறிஸ்தவர்களின்) சமூகத்தையே நாம் திருச்சபை என்று அழைக்கிறோம்.

## 3. முதல் திருச்சபை அஸ்த்திவாரம் இடல்

கிறிஸ்து தம் பணியின் ஆரம்பத்திலிருந்தே தமக்குப்பின் தம் பணியைத் தொடர்ந்து ஆற்ற பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து, அவர்களை ஆயத்தம் செய்தார் (மாற். 3:13-19). அவர்களுக்குத் தம் வாழ்விலும், பணியிலும் பங்களித்து, செயல்முறைப் பயிற்சியும் அளித்தார் (மாற். 6:6-13). இவ்வாறு கிறிஸ்து திருச்சபைக்கு அஸ்த்திவாரம் இட்டு, அதற்குரிய உள்கட்டமைப்பையும் ஏற்படுத்தினார்.

பின்னர் இக்குழுவுடன் வேறு எழுபத்திரண்டு சீடர்களையும் சேர்த்துக்கொண்டார் (லூக். 10:1-12). அக்குழுவிற்குத் தலைமைதாங்கி, வழிநடத்த பேதுருவை நியமித்தார் (மத். 16:16-19). அவர்கள் ஆற்ற வேண்டிய பணியைத் தெளிவாக விளக்கினார்.



*"நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்." (மத். 28:18–20)*

இறுதியில் இக்குழு, இயேசுவின் தாய் மரியாவையும் ஏனைய சில பெண் சீடர்களையும் உள்ளடக்கிய 120 பேர் கொண்ட குழுவாக அதிகரித்தது (அப். 1:15).

## 4. யூத பின்னணியில் கிறிஸ்த்தவம்

- இயேசுக் கிறிஸ்து ஒரு யூத குடும்பத்திலே பிறந்த ஒரு யூதர்.
- யூத மத, பண்பாடு கலாச்சாரத்திலேயே வளர்ந்தவர்.
- யூதர்களுக்கே தம் நற்செய்தியைப் போதித்தார்.
- இயேசு தெரிந்தெடுத்த சீடர்கள் அனைவரும் யூதர்களே.

- இயேசுவைத் தொடர்ந்து அவர்களும் ஆரம்ப காலத்தில் தம் இனத்தவர்களாகிய யூதர்களுக்கே நற்செய்தியை அறிவித்தனர்.
- பெந்தக்கோஸ்து விழாவிற்காக எருசலேமில் கூடியிருந்த யூதர்களுக்கே பேதுரு நற்செய்தியைப் போதித்தார்.
- இவர்களிலிருந்தே ஏறக்குறைய 3000 யூதர்கள் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்தனர்.
- சாலமோன் மண்டபத்தில் மனந்திருந்தி, ஞானஸ்நானம் பெற்ற 5000 பேர்களும் யூதர்களே.
- ஸ்தேவானின் இரத்தசாட்சி மரணத்தை அடுத்து, எங்கும் சிதறுண்டு ஓடிய சீடர்களும் தாம் சென்ற இடங்களில் தம் இனத்தவராகிய யூதர்களுக்கே நற்செய்தியைப் போதித்தனர்.
- பிலிப்பு சென்று நற்செய்தியைப் போதித்து, திருச்சபையில் சேர்த்த சமாரியர்களும் பிரிந்து சென்ற யூதர்களே.



கிறிஸ்துவின் மேல் கிறிஸ்தவர்கள் கொண்ட விசுவாசமே அவர்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்தது. அவர்கள் யூத சமுதாயத்தில் ஒரு சிறு சமூகமாக இருந்தார்கள். **அவர்களுக்கு கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையாகவே நினைத்தனர்.**

ஆதிக் கிறிஸ்தவர்கள் அனைவரும் யூதர்களாக இருந்ததால், தங்களுடைய பழைய யூத மத அனுட்டானங்களை கைவிட வேண்டுமெனக் கருதவில்லை. முதலில் இயேசுவும், பின்பு அப்போஸ்தலர்களும், தொடர்ந்து ***அனைத்துக் கிறிஸ்தவர்களும் எருசலேம் ஆலயத்துக்கும், ஜெபக் கூடங்களுக்குமே சென்று, அங்கு இடம்பெற்ற யூத வழிபாடுகளிலும், பலிகளிலும், ஜெபங்களிலும் பங்கெடுத்து வந்தனர்.***

அப்போஸ்தலர்களின் போதனைகளால் அவர்கள் வழிநடத்தப்பட்டாலும், கிறிஸ்தவர் களுக்கென்று ஒரு வேத நூல் இருக்கவில்லை. யூதர்களின் தாநாக்கையே அவர்கள் தங்கள் வேத நூலாகக் கொண்டிருந்தனர்.

<u>*யூத மதப்பிரிவுகள்*</u>

*பல அரசுகளையும், பல கலாச்சாரங்களையும் கடந்து வந்த யூதர்கள் தங்கள் மதத்தில் பல பிரிவுகளைக் கொண்ட குழுக்களாக பிரிந்து நின்றனர். ஆவைகளில் சில*

1. *பரிசேயர் (மாற் 10:12)*
2. *சதுசேயர் (மாற் 12:18)*
3. *எஸ்ஸேனர் (துறவிகள்)*
4. *ஏரோதியர் (மத் 22:16, மதற் 3:6)*
5. *சிலோட்ஸ் (தீவிரவாதிகள்) (லூக் 6:15)*

இந்த நிலை கி.பி. 70ஆம் ஆண்டில் எருசலேம் தேவாலயம் ரோமரால் தகர்க்கப்பட்டு, யூதர்களின் ஜம்னா சங்கத்தினால் கிறிஸ்தவர்கள் யூத ஜெபக்கூடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படும் வரை நீடித்தது.

நூற்றுக்கு அதிபதியாகிய கொர்னேலியுவின் மனமாற்றத்தை அடுத்து, சிறப்பாக எருசலேம் சங்கத்தின் தீர்மானத்தை அடுத்து, பல பிற இனத்தவர்கள் திருச்சபையில் சேரவே, இவ்வளவு காலமும் யூத மயமாகவிருந்த திருச்சபை படிப்படியாக பிற இனமயமாக மாறத்தொடங்கியது. **இம்மாற்றம் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளை அல்ல, அது ஒரு தனி மதம் என்ற கருத்து வளர வழிவகுத்தது. படிப்படியாக கிறிஸ்தவர்கள் யூத மத வழிபாடுகள், சட்டங்களிலிருந்து விடுபட்டு, ஒரு தனி மதமாக வளர்ந்தது.**

கிறிஸ்தவர்களின் தொகை வளரவே, திருச்சபையின் அதிகார, நிர்வாக அமைப்பும் ஒழுங்கு செய்யப்பட்டது. முதலில் திருச்சபைக்குத்

- **தலைவராக பேதுரு,**
- அடுத்து **அப்போஸ்தலர் குழு** [திருத்தூதர்கள்],
- அடுத்து **முதல்வர்கள்** அல்லது ஆயர்கள் [ஆயர்கள் - கிரேக்கத்தில் episkopoi = கண்காணிப்பாளர்கள்],
- அடுத்து **மூப்பர்கள்** [கிரேக்கத்தில் Presbyteroi = குருக்கள்],
- அடுத்து **ஊழியர்கள்** அல்லது திருப்பணியாளர்கள் அல்லது திருத்தொண்டர்கள் [கிரேக்கத்தில் diakonoi = ஊழியர்கள்],
- அடுத்து **விசுவாசிகள்** அல்லது சீடர்கள் (disciple)

என்று வகைபடுத்தப்பட்ட அமைப்புக் கொண்ட ஸ்தாபனமாக உருப்பெற்றது. **திருச்சபையின் தலைமைத்துவம் அதிகாரம் செலுத்துகிறதொன்றாக அல்ல, மாறாக மக்களுக்குப் பணிவிடை செய்பவையாக, மந்தையைப் பராமரிக்கும் மேய்ப்பரின் பணியை ஒத்ததாக அமைந்திருந்தது.**

## 5. திருச்சபையின் பண்புகள் - (*அப். 2:42-47, 4:32-37, 5:12-16, 6:1-7*)

ஆதித் திருச்சபையில் அப்போஸ்தலர்களின் போதனையை ஏற்று, ஆண்டவரும் மெசியாவுமாகிய இயேசுக் கிறிஸ்துவில் விசுவாம் கொண்டவர்களுக்கு உடனடியாகத் ஞானஸ்நானம் அளிக்கப்பட்டு, அவர்கள் திருச்சபையில் சேர்க்கப்பட்டனர். ஞானஸ்நானம் வழியாக திருச்சபையில் சேர்ந்தவர்கள், ஒரே விசுவாசத்தினால் பிணைக்கப்பட்டு, ஒரு சமூகமாக வாழ்ந்தனர். உண்மைக் கிறிஸ்தவனுக்கு அடையாளமாக கிறிஸ்து கூறிய அன்பிலும், ஒற்றுமையிலும் ஒன்றித்து வாழ்ந்தனர்.

ஆதித் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையிலே அறப்பணி முக்கிய இடத்தை எடுத்தது. கைம்பெண்கள், அனாதைகள், முதியவர்கள் போன்றோர் சிறப்பாகக் கவனிக்கப்பட்டார்கள். இறைவனுடைய அருளும் அவர்களுக்குத் தாரளமாகக் கிடைத்தன. நாளுக்கு நாள் பல புது அங்கத்தவர்கள் அவர்களின் சமூகத்தில் சேர்ந்தனர்.

**6. யூத கலவரம்** - (அப். 6, 7)

கிறிஸ்தவர்களின் தொகை அதிகரித்தது. குறிப்பாக சில யூத குருக்களும் இயேசுவை ஏற்று திருச்சபையில் இணைந்தது, யூதர்களுக்கு கிறிஸ்தவர்கள் மேல் இருந்து வெறுப்பையும், எரிச்சலையும் அதிகரித்தது. இது படிப்படியாக கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஒரு யூத கலவரத்திற்கு வழிகோலியது.

**யூத கலவரத்திற்க்கான காரணிகள்:**

- யூதர்கள் என்ன காரணத்திற்காக இயேசுக் கிறிஸ்துவை வெறுத்து, அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்களோ, அதே காரணத்திற்காகவே அவர்கள் கிறிஸ்துவின் சீடர்களையும், கிறிஸ்தவர் களையும் வெறுத்துப் பகைத்தார்கள்.
- யூதர்கள் ஒரு படையுடன் வரும் வலிமையுள்ள ஒரு லௌகிக மெசியாவை எதிர்பார்த்திருந்தனர். எனவே, அவர்கள் மாட்டுத் தொழுவத்தில், ஒரு ஏழைத் தச்சனின் மகனாகப் பிறந்த இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கவில்லை.
- இயேசுவின் போதனைகளும், செயற்பாடுகளும், அவர்களின் எதிர்பார்ப்பிற்கு முரணாக இருந்தபடியால், அவர்கள் அவரை மெசியாவாக ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள்.
- இயேசு சிலுவை மரத்தில் தொங்கி இறந்தபடியால் அவர் இறைவனால் சபிக்கப்பட்டவர் என்பது அவர்கள் கருத்து.
- கிறிஸ்தவர்கள் இயேசுவின் இறைக் கொலைப் பழியை யூதர்கள்மேல் சுமத்தினர். அவர்களின் முன்னோர்கள், ஆபிரகாம், யோசேப்பு, மோசே வழியாகப் பேசிய பரிசுத்த ஆவிக்குச் செவிகொடுக்கவில்லையென்றும், இயேசுவின் வருகையை முன்னறிவித்த தீர்க்கதரிசிகளை கொலை செய்தனரென்றும் கூறி, அவர்களோ அந்த இயேசுவையே ரோமரைக் கொண்டு கொலை செய்தார்களெனக் குற்றம் சுமத்தினர்.
- ஆனால், யூதர்கள் எருசலேம் ஆலயம் ரோமரால் தரைமட்டம் ஆக்கப்பட்டதற்கும், தாங்கள் ரோமரால் துன்புறுத்தப்படுவதற்கும் கிறிஸ்தவர்கள் இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொண்ட பாவமே காரணமென, அவர்கள்மேல் பழியைப் போட்டனர்.

இறுதியாக யூதத் தலைவர்களான சதுசேயரும், பரிசேயரும், தலைமைக் குருக்களும் கிறிஸ்தவர்கள் பரவி வளர்ந்தால், சமுதாயத்தில் தங்கள் செல்வாக்கு

அற்றுப்போய், தங்கள் பதவிகளும் பறிபோய்விடுமென அஞ்சினர். ஆகவே, இவ்விதமான பல காரணங்களுக்காக யூதர்கள் கிறிஸ்தவர்களை எதிர்த்து, வெறுத்துப் பகைத்தனர்.

## 7. முதல் இரத்தசாட்சி மறைசாட்சி – (சுமார் கி.பி. 34)

இந்த பதற்ற நிலை, யூத பரம்பரை மதவழிகளில் அதிக ஆர்வமுடைய கிரேக்க மொழி பேசும் யூதர்களுக்கும் ஸ்தேவானுக்குமிடையே மோசேயின் சட்டம், எருசலேம் தேவாலயம் பற்றி ஏற்பட்டவாக்குவாதத்தில் உச்ச நிலை அடைகிறது. ஸ்தேவானே கிரேக்க மொழி பேசும் யூத கிறிஸ்தவர்களின் தலைவராகச் செயல்பட்டவர். அவரை எதிர்த்து வாதிட முடியாத யூதர்கள், மக்களைத் தூண்டி, குழப்பம் உண்டாக்கி, அவரைக் கைது செய்து தலைமைச் சங்கத்தின் முன் நிறுத்தினர்.

**ஸ்தேவானுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றங்கள்**

1. புனித இடத்திற்கும், மோசேயின் சட்டத்திற்கும் எதிராகப் பேசியது.
2. நாசரேத்தூர் இயேசு இவ்விடத்தை அழித்து விடுவார் எனக் கூறியது.
3. இயேசு, மோசே நமக்குக் காட்டிய முறைகளை மாற்றி விடுவார் எனக் கூறியது.

தலைமைக் குரு ஸ்தேவானை விசாரித்தபொழுது, அவர் தம் சொந்த நியாயத்தை எடுத்துக் கூறாமல், தம் கிறிஸ்துவின் மேல் வைத்த விசுவாசத்தை எடுத்துக் கூறினார். (அப். 7:1-53) தலைமைச் சங்கத்தின் முன் ஸ்தேவானின் உரை.

திருச்சட்டத்திற்கு எதிராகப் பேசியதாக யூதர்கள் ஸ்தேவான் மேல் குற்றம் சுமத்த, அவரோ யூதர்கள் அத்திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்கவில்லை என அவர்களைக் குற்றம் சாட்டினார்.

மேலும் தேவன் இஸ்ரயேலுக்கு வெளியிலுமிருந்து மக்களைத் தனக்கெனத் தெரிந்தெடுக்கலாமென்றும், எருசலேம் ஆலயத்திற்கு வெளியேயும் மக்கள் கடவுளை வழிபட வேண்டுமென்று கூறி, **கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையல்ல: ஆனால், ஒரு புதிய தனி மதம் என்ற கருத்துக்களையும் உணர்த்தினார்.**

இறுதியில், “அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்” (அப். 7:56) எனக் கூறிய பொழுது, யூதர்கள் ஆவேசம் அடைந்து அவர்மேல் பாய்ந்து, அவரை நகருக்கு வெளியே தள்ளிக் கொண்டுபோய், கல்லால் எறிந்து கொன்றனர்.



ஸ்தேவானோ, “முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்” (அப். 7:60) என்று தம்மைக் கொலை செய்பவர்களுக்காக மன்றாடி, உயிர் நீத்தார். **ஸ்தேவானே முதல் இரத்தசாட்சி**

## ௮. பிற இடங்களுக்கு நற்செய்தி

ஸ்தேவானின் கொலை ஒரு பெரிய யூத கலவரத்தின் ஆரம்பமாய் இருந்தது. குறிப்பாக கிரேக்க மொழி பேசும் யூதக் கிறிஸ்தவர்கள் மிகவும் கொடூரமாக துன்புறுத்தப்பட்டார்கள். அப்போஸ்தலர் எருசலேமில் மறைமுகமாக வாழ, ஏனைய கிரேக்க மொழி பேசும் யூத கிறிஸ்தவர்கள் சிதறுண்டு எருசலேமிற்கு வெளியே, யூதேயாவின் நாட்டுப் புறங்களுக்கும், சமாரியா, செசாரியா, லிஸ்திரா, யோப்பா, தமாஸ்கு, பெனிசியா, சைப்பிரஸ், கலிலேயா, அந்தியோக்கியா வரைக்கும் ஓடிப்போனார்கள். இவ் யூத கலவரத்தில் முக்கிய பங்கெடுத்தவர் சவுல் என்னும் பவுலாவார்.

இவ்வாறு சிதறுண்டு ஓடிய கிறிஸ்தவர்கள் தாம் சென்ற இடங்களிலெல்லாம் நற்செய்தியை அறிவித்தனர். ஸ்தேவானின் இரத்தசாட்சி மரணமும், அதைத் தொடர்ந்து ஆரம்பமாகிய யூத கலவரமே நற்செய்தி எருசலேமிற்கு வெளியே பரவுவதற்கு வழி செய்தன. **கிரேக்க மொழி பேசும் யூதர்களே திருச்சபையின் முதல் ஊழியர்கள்.** அவர்கள் தாம் சென்ற இடங்களிலெல்லாம் தம் இனத்தவராகிய யூதர்களுக்கே நற்செய்தியை அறிவித்தனர்.

- *“ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப்பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமல், பெனிக்கேநாடு, சீப்புரு தீவு, அந்தியோகியா பட்டணம்வரைக்கும் சுற்றித்திரிந்தார்கள்.” - அப்போஸ்தலர் 11:19*

பிலிப்புவே ஸ்தேவானைத் தொடர்ந்து கிரேக்க மொழி பேசும் யூத கிறிஸ்தவர்களின் தலைவராகச் செயல்பட்டார்.

## ௯. பிற இனத்தவருக்கு நற்செய்தி

செசாரியாவில் பேதுரு, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படி, முதல் பிற இனத்தவராகிய கொர்னேலியு என்ற ரோம நூற்றுக்கு அதிபதியையும், அவரது குடும்பத்தினரையும், சுற்றத்தார், நண்பர்கள் அனைவரையும் ஞானஸ்நானம் அளித்து, திருச்சபையில் சேர்த்தார்.


பேதுரு பிற இனத்தவராகிய கொர்னேலியுவுக்கும் மற்றவர்களுக்கும் ஞானஸ்நானம் அளித்து, திருச்சபையில் சேர்த்துக் கொண்டமைக்காக எருசலேம் திருச்சபையிலிருந்து எதிர்ப்பு எழுந்தது. யூத கிறிஸ்தவர்கள் பிற இனத்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது அல்ல, மாறாக அவர்களுக்கு விருத்தசேதனம் செய்யாமல், அவர்களை யூதர்களாக்காமல் ஞானஸ்நானம் அளித்து

கிறிஸ்தர்களாக்கியதும், தீட்டுப்பட்ட பிற இனத்தவர்கள் வீட்டுக்குச் சென்றதும், அவர்களுடன் விருந்தோம்பியதுமே பெரிய துரோகமாகக் காணப்பட்டது.



பேதுரு யோப்பாவில் தான் கண்ட காட்சியையும், தான் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்டதையும் விளக்கிக் கூறி, ஒரு வகையாக அமைதியை ஏற்படுத்தினார். ஆனால், இப்பிரச்சினை யூத கிறிஸ்தவர்களின் மனதில் தொடர்ந்து நீடித்தது. **திருச்சபையின் தலைவராகிய பேதுருவே, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் கீழ் பிற இனத்தவரை திருச்சபையில் சேர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.**

## 10. பவுல் (சவுல்) கண்ட இயேசுவின் காட்சி - *சுமார் கி.பி. 34-36*



இயேசுவின் சீடர்களைத் துன்புறுத்திய சவுல் இயேசுவைக் காண்கின்றார். இயேசுவின் ஆர்வமிகு சீடராக மாறுகின்றார் (*கலாத்தியர் 1:13-14; பிலிப்பியர் 3:6; அப். 8:1-3*)

**பவுல் முதல் புற மதத்தவர்களின் அப்போஸ்தலர் மட்டுமல்ல, அவரே முதல் கிறிஸ்தவ இறையியலாளரும் ஆவார். அது மட்டுமல்ல, அவர் ஒரு சிறந்த எழுத்தாளரும் ஆவார். ஒரு சிறப்புத் தேர்ச்சி பெற்ற யூத பரிசேயனான அவர் யூத சட்டங்களையும், பாரம்பரியங்களையும், இறையியலையும் நன்கு அறிந்திருந்தார். கிரேக்க தத்துவ சிந்தனைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.**

ஆனால், தம் தமஸ்கு அனுபவத்தின் அடிப்படையில் அவற்றை மீளாய்வு செய்து, புதிய கண்ணோட்டத்தில் நோக்கி, புதிய கருத்தில் விளங்கிக்கொண்டார்.

## 11. எருசலேம் பொதுச்சங்கம் கூட்டப்பட்டதின் பின்னணி

கொர்னேலியுவின் மனமாற்றத்தைத் தொடர்ந்து செசாரியாவிலும், அந்தியோக்கியாவிலும், பவுலின் முதல் ஊழிய பயணத்தையடுத்து மத்தியதரை நாடுகளிலும், பிற இனத்தவர் திருச்சபையில் பெருமளவில் சேர்ந்தனர். யூதர்கள் கிறிஸ்துவை மெசியாவாக ஏற்க மறுக்க, பிற இனத்தவர்கள் பெருந் தொகையாக இயேசுவில் விசுவாசம் வைத்து, ஞானஸ்நானம் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்தனர். இதன் விளைவாக, திருச்சபை படிப்படியாக பிற இனமயமாக மாறியது. இதை எருசலேமில் வாழ்ந்த யூத பழமைவாதிகள் விரும்பவில்லை.

இப்புதிய சூழல் ஆதித்திருச்சபையில் ஓர் பெரும் பிரச்சினையை உருவாக்கியது. இவ்வளவு காலமும் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையே எனக்கருதி வந்த யூத கிறிஸ்தவர்களின் மனதில் பல கேள்விகளை எழும்பின.

- கிறிஸ்தவத்திற்கும் யூத மதத்திற்குமிடையே உள்ள தொடர்பு, உறவு என்ன?
- கிறிஸ்தவம் ஒரு தனி மதமா அல்லது யூத மதத்தின் ஒரு கிளையா ?
- பிற இனத்தவர்கள் திருச்சபையில் சேரும்பொழுது நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் என்ன?
- அவர்கள் விருத்தசேதனம் செய்து கொள்ளாமல், மோசேயின் சட்டங்களை ஏற்றுக் கடைப்பிடிக்காமல், அதாவது ஒரு யூதராக மாறாமல், கிறிஸ்தவர்களாக வர முடியுமா?

ஆரம்ப கிறிஸ்தவர்கள் எல்லோரும் யூதர்கள் என்றபடியால் விருத்தசேதனம் செய்யப்பட்டவர்களாய், யூத வேத நூலை அறிந்தவர்களாய், மோசே சட்டங்களை கடைப்பிடிப்பவர்களாய் இருந்தார்கள். எனவே, கிறிஸ்தவம் ஒரு யூத மதத்தின் கிளையென்றே என்னினர். ஆனால், **பிற இனக் கிறிஸ்தவரர்கள் விருத்தசேதனம் செய்யப்படாதவர்கள், யூத வேத நூலையோ, மோசேயின் சட்டங்களையோ அறியாதவர்கள், இஸ்ரயேலரோடு எவ்வித தொடர்பும் இல்லாதவர்கள் ஆகவே, இவர்கள் மத்தியில் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையோ, பிரிவுவோ அல்ல, அது ஒரு தனி மதம், ஒரு புது மதம் என்ற கருத்து வளர்ந்து வந்தது.**

பர்னபாவும், பவுலும் பராமரித்து வந்த அந்தியோக்கிய திருச்சபை ஒரு கலப்புத் திருச்சபை. அங்கு யூத கிறிஸ்தவர்களும், பிற இனக் கிறிஸ்தவர்களும் கலந்து, எவ்வித பிரச்சினையுமின்றி, ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர்.

ஆனால், ஒரு நாள் எருசலேமிலிருந்து சில யூதப் பழமைவாதிகள், தாங்களாக எருசலேமிலிருந்து அந்தியோக்கியாவுக்குச் சென்று, மோசேயின் முறைமைப்படி விருத்தசேதனம் செய்யாதவர்கள், மோசேயின் சட்டங்களைக் கடைப்பிடியாதவர்கள், யூதனாக முதலில் மாறாதவர்கள், ஞானஸ்நானம் பெற முடியாது, திருச்சபையில் சேர முடியாது, மீட்புப் பெற முடியாதெனப் பிற இனக் கிறிஸ்தவர்களுக்குப் போதித்தனர்.

பவுலும், பர்னபாவும் அதை எதிர்த்து வாதாடினர். வாதம் பெரும் வாக்குவாதமாக மாறியது. அந்தியோக்கிய யூத பிற இனக் கலப்புத் திருச்சபையிலே இது பெரிய குழப்பத்தையும், பிளவையும் ஏற்படுத்தி, அமைதியைக் குலைத்தது. எனவே, இப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வுகாண, அந்தியோக்கிய சபையினர் பவுலையும், பர்னபாவையும், மற்றும் சிலருடன் எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள், மூப்பர்களிடம் அனுப்பி வைத்தனர். இதுவே, எருசலேம் சங்கம் கூட்டப்பட்டதற்கு பின்னணியாகும்.

> “முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று.” – அப்போஸ்தலர் 11:26

## 12. எருசலேம் பொதுச்சங்கம் – (சுமார் கி.பி. 50)

இதுவே ஆதி திருச்சபையின் முதல் பொதுச்சங்கம். இது சுமார் கி.பி. 50ஆம் ஆண்டளவில் எருசலேமில் கூட்டப்பட்டது. இதற்கு திருச்சபையின் தலைவராகிய பேதுரு தலைமை தாங்கினார். இதில் பல்வேறு இடங்களிலிருந்து அழைக்கப்பட்ட அப்போஸ்தலர்களும், மூப்பர்களும் பங்கெடுத்தனர்.

**கூட்டப்பட்ட நோக்கம்:**

- கிறிஸ்தவம் யூத மதத்தின் கிளையா அல்லது ஒரு தனி மதமா?
- ஒருவர் கிறிஸ்தவராக வருவதற்குமுன் விருத்தசேதனம் செய்து யூதராக வேண்டுமா?
- மோசேயின் கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமா? இல்லையா?

எனத் தீர்மானிப்பதே சங்கத்தின் நோக்கமாகும்.

**இரு குழுக்கள்:**

சங்க உறுப்பினர்கள் மத்தியில் இரு முக்கிய குழுக்கள் இருந்தன:

- ஒன்று, எருசலேம் ஆயரான யாக்கோபு தலைமையிலான யூதப் பழமைவாதிகளும், பரிசேயர்களும்.
- மற்றது பவுல், பர்னபா தலைமையிலான பிற இனக் கிறிஸ்தவர்கள்.

## 13. எருசலேம் பொதுச்சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் -(அப்.15:4-35)

ஆரம்பத்தில் இரு குழுக்களும் தத்தம் கருத்துக்களை எடுத்துக் கூறி, நீண்ட நேரம் வாதம், பிரதிவாதம் செய்தனர். இறுதியில் கூட்டத்திற்கு தலைமை வகித்த பேதுரு எழுந்து, தம் கருத்துக்களை முன் வைத்தார். செசாரியாவில் கொர்னேலியுவின் ஞானஸ்நானத்தின்போது தம் அனுபவத்தை எடுத்துக் கூறினார். முடிவாக,

- *“இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக் குறித்துச் சாட்சிகொடுத்தார்; விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்” - அப். 15:8,9.*

ஆண்டவர் இயேசுவின் அருளால் நாம் மீட்புப் பெறுவது போலவே அவர்களும் மீட்புப் பெறுகிறார்களென நம்புகிறோம் என்றார்.

பேதுருவின் இவ் உரை எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்க்கமான முடிவாக அமைந்தது. விருத்தசேதனமல்ல, விசுவாசம் தான் எம் எல்லாரையும் தூய்மை ஆக்குகிறது. மோசேயின் சட்டங்கள் அல்ல, இயேசுவின் அருள்தான் நம் எல்லோருக்கும் மீட்பு அளிக்கின்றது. பேதுருவின் முடிவை எல்லோரும்

அமைதியாக ஏற்றுக்கொண்டனர். சங்கத்தின் முடிவு பிற இனக் கிறிஸ்தவர்களுக்கு சாதகமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

பேதுருவின் உரையை அடுத்து, பவுலும் பர்னபாவும் தம் ஊழிய பயணத்தின் போது பிற இனத்தாரிடையே இயேசு தம் வழியாகச் செய்த அற்புதங்களையும், அடையாளங்களையும் எடுத்துக்கூறி, அவையெல்லாம் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தையும், அவரின் வழிநடத்தலையும் காட்டுகின்றன என்றனர்.

இறுதியாக அப்போஸ்தலரும், எருசலேம் சபையின் தலைவருமான யாக்கோபு தம் முடிவுரையைக் கூறினார். பேதுரு தம் உரையில் கூறியதை அவர் மீண்டும் வலியுறுத்தி, அதற்கு ஆதாரமாக தீர்க்கதரிசி ஆமோஸ் முதலில் யூதரும், அடுத்து பிற இனத்தாரும் மீட்புப் பெறுவர் எனக் கூறியதை எடுத்துக்காட்டினார்.

- *“ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக்கொள்ளும்படிக்கு, அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களிலிருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேனென்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்.” - ஆமோ. 9:11, 12*

எனவே, நாம் பிற இனத்தாருக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது, அவர்கள் விருத்தசேதனம் செய்யவேண்டியதில்லை எனக் கூறினார்.

மேலும், எருசலேம் சங்கத்தின் இத் தீர்மானம் யூதக்கிறிஸ்தவர்களின், குறிப்பாக பரிசேயரின் கருத்துக்கு எதிராக அமைந்தபடியால், அவர்களையும் திருப்தி செய்ய, பிற இனத்தவர்கள் யூதர்களுடன் தொடர்பு கொள்ளும்போது, பந்தி அமரும்பொழுது, அவர்களுக்கு அருவருப்பு கொடுப்பனவற்றை, அதாவது சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவு, கழுத்து நெரிக்கப்பட்டுச் செத்தவை, மிருக இரத்தம், போன்றவற்றைத் தவிர்ப்பது கிறிஸ்தவர்களின் நல்லுறவுக்கு உகந்ததெனக் கூறினார்.

இப்பிரச்சினை அந்தியோக்கியா சபையில் ஆரம்பித்தபடியால், அச்சபைக்கு சங்கத்தின் தீர்மானத்தை சங்கத்தின் சார்பாக அறிவிக்க, சங்கத்தின் தீர்மானத்தை ஒரு கடிதத்தில் எழுதி, தங்கள் பிரதிநிதிகளான பர்னபா என்னும் யூதா, சீலாவிடம் கொடுத்து, அனுப்பினர்.

**<u>கடிதத்தில் எழுதி அனுப்பப்பட்ட முடிவுகள் பின்வருமாறு</u>**

இன்றியமையாதவற்றைத் தவிர அதிகமான வேறு எந்தச் சுமையையும் பிற இனத்தவர்கள்மேல் சுமத்தக்கூடாது என்று இன்றியமையாத்தான

1. விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும்,
2. வேசித்தனத்திற்கும்,
3. நெருக்குண்டு செத்ததிற்கும்,
4. இரத்தத்திற்கும்

விலகியிருக்க வேண்டும் என்பனவே.

*எருசலேம் சங்கத்தின் தீர்மானம் உண்மையாகத் திருச்சபையின் வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. விருத்தசேதனம் அல்ல, விசுவாசம்தான் எம்மைத் தூய்மையாக்குகிறது. யூத சட்டங்கள் அல்ல, இயேசுவின் அருள்தான் எமக்கு மீட்பளிக்கிறது. கிறிஸ்தவம் ஒரு தனி மதம். அது ஒரு அனைத்துலக மதம்.*

*ஒருவன் விருத்தசேதனம் செய்யாது, யூத சட்டங்களை கடைப்பிடியாது, யூதனாகாது கிறிஸ்தவனாகலாம்.*

*எவனும் தன் கலை, கலாசாரத்தை, பண்பாட்டை, மொழியை, இனத்தை, தனித்துவத்தை கைவிடாது திருச்சபையில் அங்கத்தவனாகலாம்*

*திருச்சபை எந்தவொரு இனத்துக்கும், மொழிக்கும், கலாச்சாரத்துக்கும் புறம்பானது அல்ல.*

## 14. திருச்சபையின் வளர்ச்சி

கொர்னேலியுவைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான பிற இனத்தவர்கள் திருச்சபையில் சேர்ந்தனர். அந்தியோக்கியாவில் யூத கிறிஸ்தவர்களையும், பிற இனக் கிறிஸ்தவர்களையும் கொண்ட ஒரு பெரும் கலப்புக் கிறிஸ்தவ சமூகமே உருவாகியது.

அந்தியோக்கிய கலப்புத் திருச்சபையில் ஆரம்பத்தில் ஏற்பட்ட பதற்றத்தைத் தணிக்க எருசலேமில் கூடிய முதல் பொதுச்சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்க்கமான முடிவுகள் பிற இனத்தவர்களுக்குச் சாதகமாக அமைந்தன.



திருச்சபையின் வளர்ச்சியிலே மிகப்பெரும் பங்காற்றியவர் அப்போஸ்தலரான பவுல். திருச்சபையின் விரோதியாகச் செயல்பட்ட அவருடைய வாழ்வில் ஏற்பட்ட தமஸ்கு அனுபவம், மனமாற்றம், அதைத் தொடர்ந்து அவர் மேற்கொண்ட ஊழிய பயணங்கள் திருச்சபையின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்தன.

அவரது அயராத உழைப்பினாலும், தீவிர போதனையினாலும் அப்போஸ்தலருடைய காலத்திலேயே திருச்சபை எருசலேம், யூதேயா, சமாரியா, கலிலேயா, அந்தியோக்கியா, சிப்புரு தீவு, பம்பிலியா, கலாத்தியா, பேர்கா, பிசியா நாட்டு அந்தியோக்கியா, இக்கோனியா, லிஸ்திரா, டேர்பே, பிலிப்பி, எபேசு, தியாத்திரா, சர்தை, இலவோதிக்கேயா, தெசலோனிக்கா, கொரிந்து, ரோம், சிமிர்னா, போந்து, கப்பதோச்சியா, சின்ன ஆசியா, பித்தினியா போன்ற நாடுகளில் பரவியிருந்தது.

திருச்சபை அதன் அங்கத்தவர்களின் தொகையிலும், கிறிஸ்தவ சமூகங்களின் தொகையிலும் மட்டுமல்ல, அதன் விசுவாச வாழ்விலும், நிர்வாக அமைப்பிலும், வழிபாட்டு முறைகளிலும், இறையியல், ஊழியக் கல்வியிலும் பெரும் வளர்ச்சி கண்டது.

திருச்சபையைச் சீர்குலைக்க அதனுள் தோன்றிய பேதகங்கள் இறையியலின், ஊழியக்கல்வியின் வளர்ச்சிக்கு உதவின. பல பொதுச்சங்கங்கள் கூட்டப்பட்டு, திருச்சபையின் விசுவாச உண்மைகள் அலசி ஆராயப்பட்டு, தெளிவான விளக்கங்கள் கொடுக்கச் சந்தர்ப்பங்கள் அளித்தன. பல இறையியல் கல்லூரிகளும் ஆரம்பிக்கப்பட்டன.

## 15. இரத்தசாட்சிகள் / மறைசாட்சி

**ஸ்தேவானே முதல் இரத்தசாட்சி** அதைதொடர்ந்து அப்போஸ்தலர்களில் பலரும், அனேக கிறிஸ்தவர்களும் இரத்தசாட்சிகளாய் மரிக்க வேண்டி வந்தது. அப்போஸ்தலனான யாக்கோபு சிரச்சேதம் செய்யப்பட்டார். பேதுருவும், அதன்பின் பவுலும் கொல்லப்பட்டனர். அதன்பின் அப்போஸ்தலர்கள் ஒருவர்பின் ஒருவராக கொல்லப்பட்டனர். இவர்களுடைய உயிர்த்தியாகத்தின் மத்தியில் கிறிஸ்துவின் சுவிசேஷமும், கிறிஸ்தவ சபையும் எல்லா எதிர்ப்புகளையும், தடைகளையும் தாண்டித் தொடர்ந்து வளர்ந்தது.

## 16. நீரோவின் கொடுங்கோல் ஆட்சி

நீரோ குளோடியஸ் சீசர் ஆகுஸ்டஸ் ஜேர்மானிக்கஸ் (Nero Claudius Caesar Augustus Germanicus) என்பவன் அவனது மாமனான குளோடியசினால் மறைவுக்குப் பின்னர் நீரோ என்னும் ராயன் (emperor) மன்னனாக முடி சூடினான். நீரோ மிகவும் மோசமானதொரு கொடுமைக்காரனாக இருந்தான். ஆட்சியில் தாயின் தலையீட்டை விரும்பாத நீரோ மன்னன் கி.பி. 59ஆம் ஆண்டு அவரைக் கொன்று விட்டான். தனது முதல் மனைவி ஆக்டோவியாவைக் கொலை செய்து அவளது தலையைத் தனது ஆசை நாயகி பாபபேயா சபீனாவிற்கு அனுப்பி வைத்தான். நீரோ மன்னனின் கொடுங்கோல் ஆட்சிக்கு இவள் தான் காரணம் என்று கூறப்படுகிறது. பிறகு அவளும் கொலை செய்யப்பட்டாள். நீரோ கி.பி. 54-68 வரை ரோமப் பேரரசை ஆண்டான்.



நீரோ

ரோம் எரிந்து கொண்டிருந்தபோது நீரோ பிடில் (Fiddle) வாசித்து தன்னை மகிழ்வித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் கதையே அவன் எத்தகைய மனிதன் என்பதை விளக்குகிறது.

இவனது ஆட்சிக் காலத்தில் கிறித்தவர்கள் கொடுறமாக துன்புறுத்தப்பட்டனர். ரோம் நகரை கி.பி. 64ஆம் ஆண்டு மிகப் பெரிய தீ விபத்து பற்றி ஆட்டியது. இதனை நீரோவே ஆரம்பித்ததாகவும் கூறப்படுகின்றது. நீரோ மன்னன்தான் இதற்கெல்லாம் காரணம் என்று ரோம் நகரமெங்கும் வதந்தி பரவியது. அந்த

வதந்தியை மறுத்து அந்த சந்தேகத்தை திசை திருப்புவதற்காக கிறிஸ்தவர்கள் மீது அந்தப் பழியை சுமத்தி ஏராளமான கிறிஸ்தவர்களைக் கொடூரமான முறையில் கொன்றான் நீரோ.

கிறிஸ்தவர்ளை மிருகத் தோலினால் சுற்றிக் கொடிய வனவிலங்குகள் அவர்களைக் கொன்று தின்னும்படி அவைகள் முன்னால் தூக்கி எறியும்படிச் செய்தான். தன்னுடைய தோட்டத்தில் இரவு நேர விருந்து உபச்சாரங்களின் போது கிறிஸ்தவர்களைக் கம்பத்தில் உயிரோடு கட்டி எண்ணை ஊற்றி எரித்து விளக்குக் கம்பங்களாகப் பயன்படுத்தினான் நீரோ. அவர்களைக் கம்பத்தில் கட்டி வைத்து தார் பூசி உயிரோடு கொளுத்தினான். இன்னும் பலர் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டனர்.

**“கிறித்தவர்கள் நாய்களால் கடித்துக் குதறப்பட்டு உயிர்துறந்தார்கள்; சிலுவையில் அறையப்பட்டார்கள்; தீக்கிரையாக்கப்பட்டு எரித்துக் கொல்லப்பட்டார்கள்.**” என்று ரோமின் தலைசிறந்த வரலாற்றாசிரியராகக் கருதப்படுகின்ற டாசிட்டஸ் (கி.பி. 56-117) என்பவர் நீரோ மன்னனின் ஆட்சிக் காலத்தில் கிறித்தவர்கள் துன்புறுத்தப்பட்டதை விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

மேலும், டாசிட்டஸ் கூற்றுப்படி, கிறித்தவர்கள் துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சிகள் நீரோ மன்னனின் விளையாட்டுப் பேரரங்கில், அரச தோட்டங்கள் அமைந்திருந்த இடத்தில் நடந்தன.

கி.பி. 64ல் நீரோ மன்னன் ஆட்சியில் ரோம் நகர் தீப்பற்றி எரிந்ததின் விளைவாக "மாபெரும் விளையாட்டரங்கம்" (circus maximus) என்று அழைக்கப்பட்ட ஆட்டக்களம் பெரும் சேதம் அடைந்தது. அதைத் தொடர்ந்து, பொதுமக்களுக்குக் களிப்பூட்ட நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் (கிறித்தவர்களைத் துன்புறுத்தி விலங்குகளுக்கு இரையாக்கியது உட்பட) நீரோ விளையாட்டரங்கில்தான் நடைபெற்றன. மிகக் கொடூரமாக கிறிஸ்தவர்களை நடத்தியவன் நீரோ.

தீக்கிரையான ரோம் நகரை திரும்பவும் உருவாக்க ஏராளமான செல்வந்தர்களைப் படுகொலை செய்து சொத்துக்களைப் பறிமுதல் செய்தான் நீரோ. கி.பி. 68ஆம் ஆண்டு நீரோ மன்னனுக்கு கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டு செனட் இவரை மக்கள் விரோதி என்று அறிவித்தது. ரோமப் பேரரசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து மறைவிடத்தில் வாழ்ந்து வந்தான் நீரோ. இறுதியில் ஜுன் 9, 68ல் கட்டாயத் தற்கொலை செய்து நாண்டு கொண்டு செத்தான்.

பிளினி என்பவர் டிராஜான் என்ற ரோமப் பேரரசனுக்கு 112 ம் ஆண்டில் எழுதிய கடிதங்கள் அக்காலத்துக் கிறிஸ்தவர்களைப்பற்றி நாம் மேலும் அறிந்து கொள்ள உதவுகிறது. பித்தினியாவில் கவர்னராக இருந்த பிளினி கிறிஸ்தவர்களை எப்படி நடத்துவது என்று தெரியாமல் விழித்தார். டிராஜானுக்கு அவர் எழுதிய கடிதமொன்றில், “நான் கிறிஸ்தவர்களைப் பார்த்து மூன்று முறை நீங்கள் கிறிஸ்தவர்கள்தானா? என்று கேட்பேன். அவர்கள் மூன்று முறையும் ஆம் என்று பதில் சொன்னால் அவர்களுக்கு உடனடியாக மரண தண்டனை விதிப்பேன். விடாப்பிடியாக அசைய மறுப்பவர்களைத் தண்டிப்பது அவசியம், கிறிஸ்தவர்களில் ரோமப் பிரஜாவுரிமை கொண்டவர்களை ரோமுக்கு அனுப்பிவிடுகிறேன். கிறிஸ்துவை மறுதலிப்பவர்களை உடனடியாக விடுதலை செய்துவிடுகிறேன். ஆனால், உண்மையான கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை ஒருபோதும் மறுதலிக்க மாட்டார்கள் என்று சொல்லப்படுகிறது” என்று பிளினி எழுதியிருக்கிறார்.

## 17. கிளெமண்டின் நிருபம் - கி.பி. *96*

அப்போஸ்தலர்கள் திருச்சபைகளின் மூப்பர்களையும் உதவியாளர்களையும் நியமித்திருந்தனர். இவர்களில் பலர் நல்லவர்களாகவும், திறமைசாலிகளாகவும் இருந்தபோதும் இவர்கள் எழுதிய நிருபங்கள் அப்போஸ்தலர்களின் எழுத்துக்களுக்கு சமமான வல்லமையைப் பெற்றிருக்கவில்லை.

அப்போஸ்தலர்களுடைய நிருபங்கள் எழுதப்பட்ட காலத்திற்கு பிறகு எழுதப்பட்ட நிருபங்களில் கி.பி. 96ல் கொரிந்து சபைக்கு எழுதப்பட்ட நிருபமே கிளெமன்டின் நிருபம்.

அது சுமார் 96இல் எழுதப்பட்டது. புதிய ஏற்பாட்டைத் தவிர்த்து, தொடக்க காலத்தில் உருவான எழுத்துப் படையல்களுள் இதுவே மிக்க பழமையானது ஆகும். கொரிந்து திருச்சபைத் தலைவர்கள் சிலருக்கிடையே ஏற்பட்ட விவாதத்தைத் தொடர்ந்து அவர்களுள் சிலர் பதவிநீக்கப்பட்டனர். இச்சிக்கல் குறித்துத் தீர்ப்பு வழங்குவதாக கிளமெண்டின் மடல் உள்ளது.

முதலாம் கிளமெண்ட் (Saint Clement I) என்பவர் கத்தோலிக்க திருச்சபையால் நான்காம் திருத்தந்தையாகக் கருதப்படுகிறார். இவரை "உரோம் நகரின் புனித கிளமெண்ட்" என்று அழைப்பதும் உண்டு. இவர் தொடக்க காலத் திருச்சபையின் தலைசிறந்த இறையியல் வல்லுநராய் இருப்பதால் "முதல் திருத்தூதுத் தந்தை" (Frist Apostolic Father) என்றும் அழைக்கப்பட்டார்.

தெர்த்துல்லியன் (சுமார் கி.பி. 166-220) என்னும் பண்டைக்காலத் திருச்சபை எழுத்தாளர் கூற்றுப்படி, கிளமெண்டு புனித பேதுருவிடமிருந்து ஊழியம் செய்தவர். முதல் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் உரோம திருச்சபையின் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார்.

தொடக்க காலத் திருச்சபை எழுத்தாளர்கள் பொதுவாக கிளமெண்டைப் பேதுருவுக்குப் பின் மூன்றாம் அல்லது நான்காம் திருத்தந்தையாக [பாப்பிறை, பாப்பரசர் அல்லது போப்பாண்டவர் (Pope)] வரிசைப்படுத்துகின்றனர். தெர்த்துல்லியன் கருத்துப்படி, கிளமெண்டு பேதுருவுக்குப் பின் திருத்தந்தையாகப் பொறுபேற்றார்.

புனித பவுல் பிலிப்பியருக்கு எழுதிய கடித்தில் "கிளமந்து" என்னும் ஓர் உடனுழைப்பாளர் பற்றிப் பேசுகிறார் (பிலிப்பியர் 4:3). அவர் கிளமெண்டாக இருக்கலாம் என்று கி.பி. 3 மற்றும் நான்காம் நூற்றாண்டு ஆசிரியர்கள் கருதுகிறார்கள். அவர்களுள் ஒரிஜென், யூசேபியஸ், ஜெரோம் போன்றோர் அடங்குவர்.

**<u>மரணம்</u>**

நான்காம் நூற்றாண்டின் அளவில் தொடங்கிய ஒரு மரபின்படி, கிளமெண்ட் ட்ரேஜன் மன்னன் காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கும் அவர் பிற சிறைக்கைதிகளுக்குக் கிறித்துவின் செய்தியை அறிவித்தார். பின்னர் அவரை ஒரு நங்கூரத்தில் கட்டி கடலில் ஆழ்த்திக் கொன்றுவிட்டார்கள்.

"திருத்தந்தையர் நூல்" (Liber Pontificalis) என்னும் பண்டைக்கால நூலின்படி, கிளமெண்ட் பேதுருவை அறிந்திருந்தார். கிரேக்க நாட்டில் ட்ரேஜன் மன்னனின் ஆட்சிக்கால மூன்றாம் ஆண்டில் (அதாவது கி.பி. 101ல்) இறந்தார்.

***<u>நாசரீயர்கள் (Nazareans)</u>***

*ஆரம்பத்தில் கிறிஸ்தவ திருச்சபை நாசரீயர்கள் அழைக்கப்பட்டது. பின்பு பவுலுக்குத் தொல்லைதந்த, ஆரம்பகால யூதர்களைப் பின்பற்றிய ஒரு கூட்டம் இப்பெயரில் அழைக்கப்பட்டது. கி.பி. 70களில் எருசலேம் அழிக்கப்படுவதற்கு முன்பு யூத கிறிஸ்தவர்கள் யோர்தானைத்தாண்டி பீலா என்ற இடத்தில் பாதுகாப்பு கருதி அடைக்கலம் புகுந்தனர். இவர்கள் வழி வந்தவர்கள் ஆரம்பகால யூத கிறிஸ்தவர்கள் கைவிட்டுவிட்ட யூத கலாச்சாரத்தையும், வழிமுறைகளையும் விடாப்பிடியாகப் பின்பற்றி வந்தனர். இவர்கள் மோசேயினுடைய நியாப்பிரமாணத்தை பின்பற்றியதோடு, விருத்தசேதனத்தையும், யூத சபத்து சம்பந்தமான ஏபாய்களுடைய விதிமுறைகளையும் பின்பற்றி வந்தனர். இவர்களுடைய தாக்கம் பெருமளவில் இல்லாதபோதும் நான்காம் நூற்றாண்டு முடிவுவரை இவர்களைப் பின்பற்றியோர் இருந்து வந்துள்ளனர்.*

## 18. முதல் நூற்றாண்டு சம்பவங்கள் சுருக்கமாக

- ***கி.மு. சுமார் 6:*** எருசலேம் அருகிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார்.
- ***கி.பி. 6:*** பெரிய ஏரோது இறந்தான். யூதேயாவில் ஏரோதின் வாரிசுகள் ஆண்டபோதிலும், அது யூதேயா மண்டலம் என்னும் பெயரில் உரோமின் நேரடி ஆளுகையின் கீழ் வந்தது.
- ***சுமார் கி.பி. 26-28:*** மூன்று ஆண்டுகாலம் இயேசு மக்களுக்குக் பரலோக இராஜியத்தை பற்றிய நற்செய்தியை எடுத்துரைத்தார்.
- ***சுமார் கி.பி. 28:*** இயேசு எருசலேம் நகருக்கு வெளியே சிலுவையில் அறையுண்டு மரித்தார். கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். மூன்றாம் நாள் கல்லறையிலிருந்து உயிர்பெற்றெழுந்தார்.
- ***சுமார் கி.பி. 34ஆம் ஆண்டு:*** புனித ஸ்தேவான், கிறித்துவின் பொருட்டு உயிர்துறந்த முதல் இரத்தசாட்சி. எருசலேமில் கல்லால் எறிந்து கொல்லப்பட்டார் (அப். 6:8-7:60)
- ***சுமார் கி.பி. 34-36ஆம் ஆண்டு:*** இயேசுவின் சீடர்களைத் துன்புறுத்திய சவுல் இயேசுவைக் காண்கின்றார்; இயேசுவின் ஆர்வமிகு சீடராக மாறுகின்றார் (கலாத்தியர் 1:13-14; பிலிப்பியர் 3:6; அப். 8:1-3)
- ***கி.பி. 37-40:*** உரோமைப் பேரரசு முழுவதும் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது யூதர்களுக்கும் உரோமியருக்குமிடையே பிளவு ஏற்பட்டது. கலிகுலா மன்னன் காலம்.
- ***கி.பி. சுமார் 50ஆம் ஆண்டு:*** எருசலேமில் சங்கம் கூடுகிறது. (அப். 15:1-35).
- ***கி.பி. 50:*** தார்சு நகரைச் சார்ந்த பவுல் கிறித்தவ சமயத்தைப் போதித்ததற்காக எருசலேமில் கைதுசெய்யப்பட்டார். எருசலேம் கோவிலில் அவரை ஒரு கும்பல் தாக்கியது. அவர் யூத சங்கத்தின்முன் தன்னிலை விளக்கம் தந்தார்.
- ***சுமார் கி.பி. 52ஆம் ஆண்டு:*** இயேசுவின் பன்னிரு சீடர்களுள் ஒருவராகிய தோமா இந்தியா சென்று சேர்கிறார்.
- ***கி.பி. 64ஆம் ஆண்டு:*** உரோம் நகரில் நீரோ மன்னன் கிறித்தவர்களைத் துன்புறுத்துகிறான். உரோம் நகர் தீக்கிரையானதற்கு கிறித்தவர்கள் குற்றம் சாட்டப்படுகிறார்கள். கிறித்தவர்கள் கி.பி. 313ஆம் ஆண்டுவரை பலமுறை துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர்.
- ***கி.பி. 66-73:*** யூதர்களுக்கும் உரோமியர்களுக்கும் இடையே நிகழ்ந்த முதல் போர்.
- ***கி.பி. 70:*** உரோமப் பேரரசின் படைகள் எருசலேமை முற்றுகையிட்டன. தீத்து என்னும் உரோமத் தளபதி (பின்னாளில் பேரரசன்) யூதக் கலவரத்தை அடக்கி, எருசலேமில் அமைந்திருந்த ஏருசலேம் தேவாலையத்தை தரைமட்டமாக்கினான். பலரைச் சிறைப்பிடிக்கிறார்கள்; எருசலேம் தேவாலையத்திலிருந்து

சூறையாடப்பட்ட பொருள்கள் உரோமுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றன. உரோமப் படைகள் எருசலேமில் முகாமிட்டன.

- ***சுமார் கி.பி. 72ஆம் ஆண்டு:*** இயேசுவின் பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவரான தோமா சென்னை மயிலாப்பூரில் ஈட்டியால் குத்திக் கொல்லப்பட்டார்.
- ***சுமார் கி.பி. 96ஆம் ஆண்டு:*** கொரிந்து நகர் திருச்சபைக்குத் முதலாம் கிளமெண்ட் முதல் கடிதம் எழுதுகிறார்.
- ***கி.பி. 90-96:*** டொமீசியன் மன்னன் காலத்திலும் உரோம பேரரசு முழுவதும் கிறித்தவரும் யூதரும் கொடுமைக்கு உள்ளாயினர்.
- ***சுமார் கி.பி. 100ஆம் ஆண்டு:*** இயேசுவின் பன்னிரு அப்போஸ்தலர்களில் இறுதியானவரான யோவான் எபேசு நகரில் மரித்த்தாக கூரப்படுகின்றது.

HSASM

பரிசுத்த ஆவியானவரின் எழும்பிப் பிரகாசிக்கும் ஊழியங்கள்

THE HOLY SPIRIT'S ARISING AND SHINING MINISTRIES
R. Suresh Kumar, Vellore, Tamil Nadu, India
Cell: +91-9445429420

Last Updated: 25/7/2012